Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, APRIL 19, 2024

வெள்ளிக்கிழமை ஏப்ரல் 19, 2024 | ஒளி: 09 கதிர் 234 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## பற்பசையில் போதைப்பொருள்

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபருக்கு கொண்டுவரப்பட்ட பற்பசையில் போதைப்பொருள் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர் ஒருவரை பார்ப்பதற்காக பார்வையாளர் ஒருவர் புதன்கிழமை (17) பிற்பகல் 01.40 மணியளவில் வந்துள்ளார்.

இதன்போது சந்தேக நபருக்கு கொண்டு வரப்பட்ட பற்பசை டியூபில் ஹெரோய்ன் என சந்தேகிக்கப்படும் சிறிய பொதியொன்றும், ஐஸ் போதைப்பொருள் என சந்தேகிக்கப்படும் சிறிய பொதியொன்றும் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

தொடர்ச்சி P2



## மைத்திரிக்கு தடை நீடிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் (SLFP) தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படுவதைத் தடுக்கும் தடை உத்தரவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் வியாழக்கிழமை (18) மேலும் நீட்டித்துள்ளது. இந்த உத்தரவு மே 9ஆம் திகதி வரை அமுலில் இருக்கும்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தாக்கல் செய்த வழக்கை அடுத்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.



## தேர்தல்களை பிற்போடுவது
# “நம்பிக்கைக்கு பாதிப்பு”
### இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிப்பு

பாராளுமன்ற ஜனாதிபதித் தேர்தல்களை பிற்போடுவதற்கான முயற்சிகள் இடம்பெற்றால் அதனை சிறிதளவும் சகித்துக்கொள்ளப்போவதில்லை அதனை எதிர்க்கவும் தயங்கப்போவதில்லை என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தேர்தல்களைப் பிற்போடுவது சர்வஜன வாக்குரிமை குறித்த மக்களின் நம்பிக்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என குறிப்பிட்டுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரட்ண மக்களின் வாக்குரிமைக்குச் சவால் விடுக்கின்ற விடயமாகவும் இது மாறும் என தெரிவித்துள்ளார்.




தொடர்ச்சி P2

## “2 நிமிட மௌன அஞ்சலி ஞாயிறன்று செலுத்தவும்”


‘உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலின் ஐந்தாண்டுகளை நினைவுகூரும் வகையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (21) காலை 8.45 மணியளவில் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு அனைவரையும் கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் கேட்டுக் கொண்டார்.

இத்தாக்குதல் தொடர்பில் கவனத்தை ஈர்க்கும் வகையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை(21) ஆன்மிக தரப்பினரின் கவனத்தை ஈர்ப்பதாகவும், அதன்படி 20ஆம் திகதி பிற்பகல் முதல் 21ஆம் திகதி காலை வரை கொழும்பு கொச்சிக்கடை தேவாலயத்தில் இருந்து சமய ஊர்வலம் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



தொடர்ச்சி P2

## இந்திய பொதுத் தேர்தல்: இன்று முதல் வாக்களிப்பு



உலகின் மிகப்பெரிய ஜனநாயக தேர்தல் நடவடிக்கையாக கருதப்படும் இந்திய பொதுத்தேர்தல் வாக்களிப்பு வெள்ளிக்கிழமை (19) ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ச்சி P2

## “புறக்கோட்டையில் கடத்தல்காரர்கள் குழு”



- **கடத்தல்காரர்கள் கொழும்பு நகரில் அனுமதியற்ற கட்டுமானங்களை தினசரி வாடகைக்கு குத்தகைக்கும் விடல்.**
- **கொழும்பு மிதக்கும் சந்தைக்கு முன்பாக உள்ள 21 கடைகளை அகற்றுவதற்கு முன் அகற்றுமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டது.**
- **ஒழுங்கமைக்கப்பட்ட கடத்தல்காரர்களிடம் சிக்கி உங்கள் விலை மதிப்பற்ற பணத்தை வீணாக்காதீர்கள்.**
- **மிதக்கும் சந்தை வளாகத்தை ஜப்பானுக்கு வழங்குவதற்கும் சட்டவிரோத கடைகளை அகற்றுவதற்கும் எந்த தொடர்பும் இல்லை.**

கொழும்பு-புறக்கோட்டையில் அனுமதியற்ற விதத்தில் கடைகளை நிர்மாணிப்பதன் பின்னணியில்ஒழுங்கமைக்கப்பட்ட கடத்தல்காரர்கள் குழுவொன்று இருப்பதாக கொழும்பு மாநகர சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை வெளிப்படுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2



## இ.தொ.கா கொழும்பில் இன்று ஆர்ப்பாட்டம்

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த அடிப்படை சம்பளமாக 1,700 ரூபாவினை வழங்குமாறு வலியுறுத்தி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் கொழும்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## உயிரிழப்புகளுக்கு மாரடைப்பே பிரதானம்



2010ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரை, பொது மருத்துவமனைகளில் பதிவான அதிக எண்ணிக்கையிலான இறப்புகள் மாரடைப்பால் ஏற்பட்டதாக சுகாதார பிரிவு சுட்டிக்காட்டுகின்றது. ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கம், உடல் உழைப்பின்மை, புகையிலை, மது அருந்துதல், மன அழுத்தம் ஆகியவை மாரடைப்புக்கு முக்கியக் காரணம் என கூறப்படுகிறது.

தொடர்ச்சி P2

## திருடும் சிறார் கும்பல் கைது

முகத்தை மூடி கையுறை அணிந்து வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்த சிறார் கும்பலைச் சேர்ந்த மூவரை கஹதுடுவ பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் 13 மற்றும் 18 வயதுக்கு இடைப்பட்டவர்கள் கஹதுடுவ பிரதேசத்தில் வசித்து வருவதாகவும், பாடசாலை செல்லும் சிறுவர்களும் அடங்குவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

வீடுகளில் இருந்த மடிக்கணினிகள், பித்தளைப் பொருட்கள், அலைபேசிகள் உள்ளிட்ட சொத்துக்கள் திருடப்பட்டு, சம வயதுடைய சிறுவர்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதன்படி, இந்தக் கும்பல் நீண்டகாலமாக இந்த திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு வருவதாகவும், அதன்படி சொத்துக்களை வைத்திருப்பவர்களை பொலிஸ் காவலில் எடுத்து நீண்ட நேரம் விசாரிக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

### பாடசாலைகளுக்கு அண்மையில்
## கனரக வாகனங்கள் பயணிக்க தடை

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் பாடசாலை ஆரம்பமாகும் மற்றும் முடிவுறும் நேரங்களை அல்லது அண்மித்த நேரங்களில் பாடசாலையை அண்மித்த வீதிகளில் கனரக வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## 7 இலட்சம் சுற்றுலா பயணிகள் வருகை



ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் மொத்தம் 718,315 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

ஏப்ரல் மாதத்தின் முதல் 15 நாட்களில் 82,531 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இது நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வளர்ச்சி வேகம் சீராக இருப்பதைக் காட்டுகிறது.

ஒரு வருடத்திற்கு முன்பு நாளாந்த சுற்றுலாப் பயணிகளின் வருகை 3,000 ஆகக் குறைந்து இருந்த நிலையில், தற்போது ஏப்ரல் மாத்தில் 5,502 ஆக அதிகரித்துள்ளது.

தொடர்ச்சி P2

## கடலில் குழந்தை பிரசவம்

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - நயினாதீவை சேர்ந்த பெண்ணொருவர் கடலில் குழந்தை பிரசவித்துள்ளார்.

நயினாதீவை சேர்ந்த பெண்ணொருவருக்கு புதன்கிழமை (17) திடீரென பிரசவ வலி ஏற்பட்டதையடுத்து, நயினாதீவு பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றுமாறு வைத்தியர் பரிந்துரைத்தார். இதனையடுத்து, போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு, அம்பியூலன்ஸ் படகு தற்போது சேவையில் ஈடுபடாததால், பொதுமக்கள் போக்குவரத்து படகில் ஏற்றி குறிகாட்டுவான் நோக்கி அழைத்து சென்றுள்ளனர்.

இந்நிலையில், கடலில் படகு பயணித்துக்கொண்டிருந்தவேளை, பிரசவ வலி பெண்ணுக்கு அதிகரித்ததையடுத்து, படகின் கீழ்த் தளத்தில் இருந்த ஆண்களை மேல் தளத்திற்கு அனுப்பி வைத்த பின்னர், படகில் பயணித்த பெண்களே பிரசவம் பார்த்துள்ளனர்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்


# இந்திய பொதுத் தேர்தல்: இன்று முதல் வாக்களிப்பு

இந்திய பாராளுமன்றம் பிரதிநிதிகள் சபை (லோக்சபா) மற்றும் மேல் சபை (ராஜ்யசபா) ஆகியவற்றைக் கொண்டுள்ளது. 543 மக்களவைத் தொகுதிகளுக்கு வெள்ளிக்கிழமை (19) பொதுத் தேர்தல் நடைபெறுகிறது.

பொதுத் தேர்தல் 2 1/2 மாதங்களுக்கு 7 கட்டங்களாக நடைபெறும். முதல் கட்ட தேர்தல் இன்றும் (19), 2ஆவது கட்டம் ஏப்ரல் 26ஆம் திகதியும், மூன்றாம் கட்டம் மே 7ஆம் திகதியும், நான்காம் கட்டம் மே 13ஆம் திகதியும், ஐந்தாம் கட்டம் மே 20ஆம் திகதியும், ஆறாம் கட்டம் மே 25ஆம் திகதியும், ஏழாவது கட்டம் ஜூன் 1ஆம் திகதியும் நடைபெறும் என இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஜூன் 4ஆம் திகதி வாக்கு எண்ணிக்கை மற்றும் முடிவுகள் வெளியிடப்படும். இந்த பொதுத் தேர்தலில் 970 மில்லியன் மக்கள் வாக்களிக்க பதிவு செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

நரேந்திர மோடி கடந்த 2014ஆம் ஆண்டு முதல் இந்தியாவுக்கு வலுவான தலைமையை வழங்கி வருகிறார். மோடியின் பாரதிய ஜனதா கட்சி தங்களுக்கு நட்பான அரசியல் கட்சிகளுடன் கூட்டணி அமைத்துள்ளது. இந்தக் கூட்டணி,தேசிய ஜனநாயகக் கூட்டணியாகும்.



# இ.தொ.கா கொழும்பில் இன்று ஆர்ப்பாட்டம்

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு பேச்சுவார்த்தையை முதலாளிமார் சம்மேளனம் புறக்கணித்தமை மற்றும் சம்பள உயர்வு வழங்காமை என்பவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு - கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக வெள்ளிக்கிழமை (19) காலை 9 மணி முதல் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளவர்கள் கறுப்புப்பட்டி அணிந்து கலந்துகொள்ளவுள்ளதாக தெவிக்கப்பட்டுள்ளது.

# கனரக வாகனங்கள் பயணிக்க தடை

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் ஆகியோரின் இணைத் தலைமையில் யாழ். மாவட்டச் செயலகத்தில் வியாழக்கிழமை (18) நடைபெற்றது.

பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லும் போதும், பாடசாலையில் இருந்து வீடு திரும்பும் போதும் பாடசாலைகளை அண்மித்த வீதிகளில் கனரக வாகனங்கள் வேகமமாகவும், சில நேரங்களில் வீதி ஒழுங்கு விதிகளை மீறியும் பயணிப்பதாக கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனை அடுத்து பாடசாலை ஆரம்பமாகும் , முடிவுறும் வேளைகளில் பாடசாலைகளை அண்மித்த பகுதிகளில் கனரக வாகனங்களை பயணிப்பதை தடை செய்வதாகக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.



## தேர்தல்களை பிற்போடுவது
# “நம்பிக்கைக்கு பாதிப்பு”
### இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தல் பாராளுமன்றத் தேர்தல்களில் எது முதலில் இடம்பெறவேண்டும் என தெரிவிக்கும் அரசமைப்பு ஏற்பாடுகள் எதுவும் இல்லை என குறிப்பிட்டுள்ள அவர், அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் இந்தத் தேர்தல்கள் இடம்பெறவேண்டும் என்றே சட்டம் தெரிவிக்கின்றது எனவும் கூறியுள்ளார்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதிக்கு பதில், தற்போதைய ஜனாதிபதி ஆட்சி புரிகின்றார் என்றாலும், தற்போதைய ஜனாதிபதியின் பதவி காலம் எதிர்வரும் நவம்பர் மாதத்துடன் முடிவிற்கு வருகின்றது என தெரிவித்துள்ள கௌசல்ய நவரட்ண, நவம்பருக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தின் ஆயுள் காலம் முடிவடைந்ததும் பாராளுமன்ற தேர்தலை நடத்தவேண்டும் பாராளுமன்றத்தை அதற்கு முன்னர் கலைக்க முடியுமென்றால் ஜனாதிபதித் தேர்தலிற்குமுன்னர் பாராளுமன்றத் தேர்தலை நடத்தலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட காலத்திற்குள் தேர்தலை நடத்த வேண்டியது பாராளுமன்றத்தினதும் தேர்தல் ஆணையகத்தினதும் கடமை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தலை பிற்போடுவதற்கான ஏற்பாடுகள் எதுவும் அரசமைப்பில் இல்லை இதற்கு அரசமைப்பு ஏற்பாடுகள் அவசியம் அரசமைப்பில் மாற்றங்களை மேற்கொள்வதன் மூலம் அல்லது பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு ஆதரவு

மற்றும் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் மாத்திரமே அதனைச் செய்ய முடியும் எனவும் குறிப்பிட்டுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த முடியுமென்றால் நிச்சயமாக உங்களால் தேர்தலை நடத்தமுடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# உயிரிழப்புகளுக்கு மாரடைப்பே பிரதானம்

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட சுகாதார அமைச்சின் தொற்றா நோய்களுக்கான பணிப்பாளர் அலுவலகத்தின் விசேட வைத்தியர் ஷெரில் பாலசிங்கம் இது தொடர்பில் பின்வருமாறு விளக்கமளித்தார்.

“இதயத்திற்கு இரத்தத்தை வழங்கும் இரத்த நாளங்கள் சேதமடைவதால் இந்த நோய் நிலை ஏற்படுகிறது. இதை மாரடைப்பு என்று நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். தொற்றா நோய்களுக்கு பல சிறப்பு ஆபத்து காரணிகள் உள்ளன. முதலாவது ஆரோக்கியமற்ற அதிகப்படியான சர்க்கரை, உப்பு மற்றும் எண்ணெயின் பயன்பாடு, உடல் செயல்பாடு இல்லாமை, புகையிலை மற்றும் மதுபானம் ஆகியவற்றின் பயன்பாடு ஆகும்.

கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் கணனிகளின் அதிகரித்த பாவனையினால் சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் இருவரும் சுறுசுறுப்பான வாழ்க்கை முறையிலிருந்து விலகியுள்ளதாக வைத்தியர் ஷெரில் பாலசிங்கம் மேலும் தெரிவித்தார்.

“குழந்தைகள் ஒரே இடத்தில் அதிக நேரம்



செலவழித்து ஒன்லைன் கம்ப்யூட்டர் கேம்களுக்கு அடிமையாகி வருகின்றனர். வீட்டில் வயதான இல்லத்தரசிகள் கூட எப்போதும் டி.வி பார்த்து மணிக்கணக்கில் அமர்ந்துதான் இருப்பார்கள். மேலும், வயது வரம்பு இல்லாமல் அலைபேசிகளுக்கு அடிமையாகி இருப்பது பெரும் சோகம். நாம் முடிந்த போதெல்லாம் நடக்க வேண்டும் என்றார்.

# 7 இலட்சம் சுற்றுலா பயணிகள் வருகை

ஏப்ரல் மாதத்தில் 168,539 ற்கும் 182,724 ற்கும் இடையில் சுற்றுலாப் பயணிகள் வருகையை இலங்கை இலக்காகக் கொண்டுள்ளது.
இந்த இலக்கை அடைய நாளாந்தம் சராசரியாக 5,617 முதல் 6,090 வரை சுற்றுலாப் பயணிகள் வருகை தரவேண்டும்.
தற்போதைய வருகையின் வேகம் இலங்கை மாதத்திற்கான வருகை இலக்கின் கீழ் எல்லையை எட்டக்கூடும் என்பதைக் காட்டுகிறது.
சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்தால் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் பதிவு செய்யப்பட்ட 105,498 சுற்றுலா பயணிகளின் வருகையை நாடு விஞ்சும்.
2018ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணகளின் வருகையை நாடு அடைய மேம்பட்ட வேகம் தேவை.

ஏப்ரல் மாதத்தில் 17 சதவீதமான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளனர். 11 சதவீதமான சுற்றுலாப் பயணிகள் பிரித்தானியாவிலிருந்து வருகைத் தந்துள்ளனர். ஐக்கிய இராச்சியம் தனது பிரஜைகளுக்காக வெளியிட்டுள்ள இலங்கைக்கான பயண ஆலோசனையை (Travel Advisory) தளர்த்தியுள்ளமையினால் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளின் வருகை எதிர்பார்க்கப்படுகிறது. 10 சதவீதமான சுற்றுலாப் பயணிகள் ரஷ்காவிலிருந்து வருகை தந்துள்ளனர். ஜேர்மனி, பிரான்ஸ், அவுஸ்திரேலியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் தரவரிசையில் நான்காவது, ஐந்தாவது, ஆறாவது மற்றும் ஏழாவது இடங்களைப் பிடித்துள்ளன.



# கடலில் குழந்தை பிரசவம்

படகு குறிகட்டுவான் இறங்கு துறையை வந்தடைந்ததும், அங்குத் தயார் நிலையில் நின்ற புங்குடுதீவு வைத்தியசாலையின் நோயாளர் காவு வண்டியில் தாயையும் சேயையும், யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.


தற்போது தாயும் சேயும் நலமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



# பற்பசையில் போதைப்பொருள்

பார்வையாளர்களைத் சோதனையிடும் பணியில் ஈடுபட்டிருந்த சிறைச்சாலை அதிகாரிகளால் அதனை சோதனை செய்து சந்தேகநபரை கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர் மட்டக்குளி பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

# “2 நிமிட மௌன அஞ்சலி ஞாயிறன்று செலுத்தவும்”



கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயத்திற்கு, இரவு முழுவதும் பிரார்த்தனை செய்துவிட்டு, காலை 8.30 மணியளவில் துவாபிட்டிய தேவாலயத்தை சென்றடைய திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# “புறக்கோட்டையில் கடத்தல்காரர்கள் குழு”

கொழும்பு மிதக்கும் சந்தைக்கு முன்பாக நேற்று இடிக்கப்பட்டுள்ள 21 கடைகளும் கடத்தல்காரர்களால் கட்டப்பட்ட சட்டவிரோத கட்டுமானங்களே என கொழும்பு மாநகரசபையின் நகர அழகுபடுத்தல் திட்ட இணைப்பாளர் பொறியியலாளர் குமுது போகஹவத்த தெரிவித்தார்.

கடத்தல்காரர்கள் கடைகளை தினசரி வாடகைக்கு வேறு நபர்களுக்கு குத்தகைக்கு விட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றார். சட்டவிரோத கட்டுமானம் குறித்து முதன்முறையாக முறைப்பாடு கிடைத்தால் அதனை அகற்றுவதற்கு மாநகரச் சபை நடவடிக்கை எடுப்பதாக அவர் கூறினார்.

எனவே, இவ்வாறான ஒழுங்கமைக்கப்பட்ட கடத்தல்காரர்களுக்கு இரையாகி பணத்தை வீணடிக்க வேண்டாம் எனக் கொழும்பு மாநகர சபையும் நகர அபிவிருத்தி அதிகார சபையும் மக்களிடம் கேட்டுக்கொள்கின்றன.

அனுமதிபெறாத கடைகளை அகற்றும் முன், கடை உரிமையாளர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான முதல் அறிவிப்பு கடந்த ஆண்டு டிசம்பர் 20ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் வெளியிடப்பட்டது.

இதனையடுத்து, கடந்த ஜனவரி 2ஆம் திகதி அனைத்துக் கடை உரிமையாளர்களுக்கும் 14 நாட்களுக்குள் கடைகளை அகற்றுமாறு கொழும்பு மாநகர சபை எழுத்து மூலம் அறிவித்தல் விடுத்துள்ளது. பல தடவைகள் இந்தக் கடைகளின் உரிமையாளர்களை அவ்விடத்தை விட்டு வெளியேறுமாறு வாய்மொழி அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாக கொழும்பு மாநகர சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிடுகின்றன.

ஆனால், குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அகற்றப்படாததால் கடந்த 16, 17 ஆகிய இரு தினங்களில் இந்த அனுமதியற்ற கடைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொறியாளர் தெரிவித்தார்.

மேலும், எதிர்காலத்தில் இந்தக் கடைகளை அவற்றிலிருந்து அகற்றுவதற்கு நகரச் சபையினால் செலவிடப்படும் பணத்தைமீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

கொழும்பு மிதக்கும் சந்தைக்கு முன்பாக உள்ள கடைகளை அகற்றுவது தொடர்பில் ஊடகங்களுக்கு அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது, இந்த இடத்தில் 73 சட்டவிரோத கடைகள் கட்டப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். 2013 இலும் அகற்றப்பட்டு, கொழும்பு பஸ்தியன் மாவத்தை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதி மக்கள் அகற்றப்பட்டு அதனை கவர்ச்சிகரமான முறையில் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் மேலதிக பணிப்பாளர் நாயகம் மகிந்த விதானாராச்சி தெரிவித்தார்.

பத்தரமுல்லை, செத்சிறிபாயவில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் வியாழக்கிழமை(18) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் மேலதிக பணிப்பாளர் நாயகம் மகிந்த விதானாராச்சி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 2013இல் இந்த இடத்தில் கட்டப்பட்ட சட்டவிரோதக் கடைகளை நாங்கள் அகற்றிய பின்னர், கடந்த கோவிட் மற்றும் போராட்டத்தின் போது சில ஒழுங்கமைக்கப்பட்ட நபர்கள் வெவ்வேறு காலங்களில் மிதக்கும் சந்தையின் முன் கடைகளைக் கட்டியுள்ளனர். அவர்களை அந்த இடத்தை விட்டு செல்லுமாறு அறிவித்தும் அவர்கள் அங்கிருந்து செல்லாததன் காரணத்தினால்

இந்த கடைகளை அகற்றுமாறு நகர அபிவிருத்தி அதிகார சபை கொழும்பு மாநகர சபையிடம் கோரிக்கை விடுத்தது.

கொழும்பு மெனிங் சந்தையில் மாத்திரம் 231 அனுமதியற்ற கடைகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடைகளை அகற்றுவதை ஏற்றுக்கொண்ட போதிலும், கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் கடைகளை அகற்றுவது குறித்து ஆலோசிக்க உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக மேலதிக பணிப்பாளர் நாயகம் மஹிந்த விதானாராச்சி மேலும் தெரிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய மருந்துப்பொருட்கள் விவகாரம்

# அடிப்படை உரிமை மனுத்தாக்கல்

- பல மருந்துகளை போட்டி ஏலங்கள் இன்றி இறக்குமதி செய்வது தவறானது என்றும் சட்டவிரோதமானது என்றும் அறிவித்தல்
- பதிவு செய்வதிலிருந்து விலக்களிப்பதை மறுபரிசீலனை செய்தல்
- கணக்காய்வாளர் நாயகத்தினால் விசேட விசாரணை நடத்த அறிவுறுத்தல்
- வழக்கு விசாரணைகளுக்கு அறிவுறுத்துதல்
- அரசுக்கு அல்லது பொது மக்களுக்கு ஏற்படும் செலவினங்களை நேரடியாக மீளப்பெறல் மற்றும் இழப்பீடு வழங்குதல்



மனித நோயெதிர்ப்புப் புரதம் (மனித-IG) உள்ளிட்ட மருத்துவப் பொருட்களின் சமீபத்திய சர்ச்சைக்குரிய கொள்முதல்கள் சுகாதாரத்துறையிலும் பொதுமக்களிலும் ஏற்படுத்தும் கடுமையான விளைவுகளை முன்னிலைப்படுத்தி, ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா (TISL) நிறுவனம் ஏப்ரல் 16ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் ஓர் அடிப்படை உரிமை மனுவை (SCFR/ 99/2024) தாக்கல்செய்தது.

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 66 பிரதிவாதிகளில் அமைச்சரவை அமைச்சர்கள், சுகாதாரத்துறையில் பதவியில் உள்ளவர்கள் மற்றும் முன்னாள் உயர் அதிகாரிகள், முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, சர்ச்சைக்குரிய மருந்து விநியோகத்தில் ஈடுபட்டுள்ள கம்பெனிகள், திறைசேரிசெயலாளர், கணக்காய்வாளர் நாயகம், சுங்கத்துறை பணிப்பாளர் நாயகம், பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபர்,CIABOC உறுப்பினர்கள் மற்றும் பணிப்பாளர்நாயகம் ஆகியோர் அடங்குவர்.

பொது வளங்களைத் தவறாகப் பயன்படுத்தியமை, பிரஜைகளின் அடிப்படை உரிமைகளை மீறியமைக்காகவும் பொறுப்புக்கூறவேண்டும் என்ற நோக்கத்துடன் பொதுநலன் கருதி அடிப்படை உரிமை மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஐஸொலெஸ் பயோடெக் பார்மா ஏஜி (PVT) LTD (Isolez Biotech Pharma AG (Pvt) Ltd), லைவால்த்பயோபார்மா (PVT) LTD (LivealthBioPharma (Pvt) Ltd), யடென் இன்டர்நெஷனல் (PVT) LTD (Yaden International (Pvt) Ltd), நந்தனி மெடிக்கல் லேபொரேட்டரிஸ் (PVT) LTD (Nandani Medical Laboratories (Pvt) Ltd), டிவைன் லெபொரேட்டரிஸ் (PVT) LTD (Divine Laboratories (Pvt) Ltd), குல்பிக் பயோசயின்சஸ்LTD (Gulfic Biosciences Limited), நோவாசெம் லங்கா PVT) LTD (Novachem Lanka (Pvt) Ltd)மற்றும் ஸ்லிம் பார்மாசூட்டிகல்ஸ் (PVT) LTD (Slim Pharmaceuticals (Pvt) Ltd)ஆகிய நிறுவனங்களிடமிருந்து மருத்துவப் பொருட்களை கொள்முதல் செய்ய அமைச்சரவை மற்றும் சுகாதார அதிகாரிகள் மேற்கொண்டதாகக் கூறப்படும் முடிவு தவறானது, சட்டவிரோதமானது, சட்டத்துக்குப்புறம்பானது, செல்லுபடியற்றது மற்றும் சட்டப்படி செல்லத்தகாதது என நீதிமன்றம் பிரகடனப்படுத்த வேண்டும் என்று மனுவில் கோரப்பட்டுள்ளது.

பிரதிவாதிகளின் செயல்கள் அல்லது செயலற்றதன்மை அரசியலமைப்பின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறுவதாகும் மனுதாரர்கள் வாதிடுகின்றனர்.

அதன் மூலம் மருத்துவப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காகப் பதிவு செய்வதிலிருந்து விலக்களிப்பதை மறுபரிசீலனை செய்யவும் கொள்முதல் செய்வதில் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்த, சட்டம் மற்றும் விதிமுறைகளால் விதிக்கப்படும் நடைமுறைப் பாதுகாப்புகளைப் பின்பற்றுமாறு பிரதிவாதிகளை அறிவுறுத்தவும் மனுதாரர்கள் நீதிமன்றத்தின் தலையீட்டைக் கோருகின்றனர்.

"சுகாதாரத்துறையில் ஏற்பட்டதாகக்கூறப்படும் 'அவசரநிலை' பெரும்பாலும் தவறான நிர்வாகத்தால் ஏற்பட்டது என்பது தெளிவாகத்தெரிகிறது.

மேலும், இத்தகைய தவறான நோக்கங்களுக்காக அவசரநிலையை ஏற்படுத்திய சுகாதார அமைச்சில் பதவிவகிக்கும் தனிநபர்களின் சூழ்ச்சிகளை சுட்டிக்காட்டுகிறதா என்ற கவலையை எழுப்புகிறது என்று மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்திய கடன் வரியின் கீழ் மருந்துப் பொருட்களைஇறக்குமதி செய்யும் போது சட்டத்திற்கு இணங்காமை மற்றும் சட்டத்தை முற்றிலும் புறக்கணித்தமை ஆகிய காரணங்களுக்காக, 2023 பெப்ரவரியில் தாக்கல் செய்யப்பட்டTISL-இன் நடைமுறையிலுள்ள மனுவுக்கு (SCFR/65/2023) மேலதிகமாக இந்த மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

TISL, தனது சமீபத்திய அடிப்படை உரிமை மனுவில், பதிவுவிலக்கு வழங்கப்பட்ட மருத்துவ விநியோகஸ்தர்களிடமிருந்து மருத்துவப்பொருட்களைப் பெறுவதற்கான தீர்மானம் தொடர்பாக விஷேடமாக விசாரணை நடத்துமாறு கணக்காய்வாளர் நாயகத்துக்கு உத்தரவிடவும், அவர்கள் மூலம்மருத்துவப்பொருட்களைப் பெறுவதால் ஏற்படும் செலவைக்கணக்கிடவும் நீதிமன்றத்தைக்கோருகிறது.

அத்துடன், பதிவுவிலக்குகளைப் பயன்படுத்தி மருத்துவப்பொருட்களை வாங்குவதன்மூலம் நிதி அல்லது பிறநன்மைகளைப் பெற்றதாக அடையாளம் காணப்பட்டநபர்கள் மீது வழக்குத்தொடர சட்டமா அதிபருக்கு (AG) உத்தரவிடுமாறு அது நீதிமன்றத்தைக்கோருகிறது. மேலும், அரசுக்கு அல்லது பொதுமக்களுக்கு ஏற்படும்செலவுகளை மீளப்பெற சட்டமா அதிபருக்கு உத்தரவிடுமாறும், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பந்தப்பட்டதரப்பினரிடமிருந்து இழப்பீடு பெறுமாறும் நீதிமன்றத்தை அதுகோருகிறது.

## வீதி விபத்தில் நால்வர் காயம்



ஹொரணை - அங்குருவத்தோட்ட பிரதான வீதியில் பல்லாபிட்டிய பாடசாலைக்கு முன்பாக வியாழக்கிழமை (18) பொல்ரோ கெப் வண்டியொன்றும் - டீமோ பட்டா லொறியும் மோதி விபத்துக்குள்ளானதில் நான்கு பேர் காயமடைந்து ஹொரணை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பேருவளை மீன்பிடி துறைமுகத்தில் இருந்து ஹந்த பாங்கொட பகுதிக்கு மீன் ஏற்றிச் சென்ற டிமோ பட்டா லொறி மற்றும் அங்குருவத்தோட்ட, வாரக்காகொடை பகுதிக்கு சென்று கொண்டிருந்த தனியார் வாகனமொன்றுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியது.

விபத்தின் போது மீன் லொறியின் முன் இருக்கையில் இருந்த சாரதி உட்பட மூவரும், பின் இருக்கையில் இருந்த உதவியாளர் ஒருவருமே காயமடைந்துள்ளனர்.

டீமோ லொறியின் சாரதி தூங்கியதால், லொறி வீதியை விட்டு பாய்ந்து முன்னால் வந்த கெப் வண்டியில் மோதி இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என ஹொரணை பொலிஸ் போக்குவரத்து பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

## "தடுப்புச் சுவருக்கு நிதி ஒதுக்கீடு"

எம்.எஸ்.எம்.ஹனீபா



நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்பை தடுப்பதற்கான தடுப்புச் சுவர் நிர்மாணிப்பதற்கு இரண்டாம் கட்டமாக 20 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசீம் வியாழக்கிழமை (18) தெரிவித்துள்ளார்.

நிந்தவூர் பிரதேசத்தின் வடக்கு கடல் எல்லையின் கடலரிப்பை தடுப்பதற்கு கரைக்கு குறுக்கால் கல் வீதியமைக்கும் நிரந்தரத் தீர்வுத்திட்டத்திற்காக பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை கள விஜயம் செய்து பார்வையிட்டு இதற்கான செலவு மதிப்பீடுகளை சமர்ப்பீட்டு அறிகைை சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கரையோரப் பாதுகாப்பு பேணல் திணைக்களத்தின் கிழக்கு பிராந்திய பொறியியலாளர் எம்.துளசிதாஸன், கரையோரப் பாதுகாப்பு பேணல் திணைக்களத்தின் பொறியியலாளர் உட்பட உயர் அதிகாரிகளும் இவ் விஜயத்தில் கலந்துக்கொண்டுள்ளனர்.

வடக்கு பகுதியில் எல்லை தொடக்கம் காரைதீவு வரையிலான பிரதேசம் வரைக்கும் தடுப்பு சுவர் அமைக்கவுள்ளதாகவும், மே மாதம் நடுப்பகுதியில் இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், ஜனாதிபதியிடம் விடுத்த கோரிக்கைக்கமைய முதற்கட்டமாக 10 மில்லியன் நிதி ஒதுக்கீ செய்யப்பட்டு தடுப்புச் சுவர் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் பாவனைக்கு

## மின்திட்டம் கையளிப்பு

வெளிமடை, ஊவாபரணகம, பெகின்டன் தோட்டத்திற்கான மறுசீரமைக்கப்பட்ட மின்திட்டத்தை மக்கள் பாவனைக்காகக் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் கையளித்துள்ளார்.

குறைவான மின்வலு காரணமாக, சுமார் 500 குடும்பத்திற்கும் அதிக மானவர்கள், நீண்டகாலமாக பல்வேறு சிரமத்திற்கு உள்ளாகியிருந்தனர்.

இத்திட்டம் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமாரின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், மூன்றரை கோடி ரூபாய் செலவில், புதிய மின்மாற்றி (Transformer), புதிய மின்கம்பங்கள், புதிய மின்கம்பிகள் போன்றவற்றினூடாக மின் வலு அதிகரிக்கப்பட்டது.

இந்நிகழ்வின் போது, ஐக்கிய மக்கள் முன்னணியின் பிரதேச அமைப்பாளர் நவரட்ணராஜா உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து சிறப்பித்துள்ளனர்.



## இடமாற்றத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

வ.சக்தி




மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் கீளுள்ள பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலயத்தின் முன்னால், பாழுகாமத்திலுள்ள மூன்று பாடசாலகளிலும் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் என பலரும் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டமொன்றில் வியாழக்கிழமை (18) ஈடுபட்டுள்ளனர்.

குறுகிய காலத்தில் வலயத்தை முன்னேற்றிய கல்விப் பணிப்பாளர் எமக்கு வேண்டும், அரச அதிகாரிகள் மீதான அரசியல் பழிவாங்கலை உடன் நிறுத்து, பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளரின் முறைகேடான இடமாற்றத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம் போன்ற பல வாசகங்கள் எழுதிய பாதாதைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் இவ்வார்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தில் வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிவந்த சிவினந்தம் ஸ்ரீதரனை இடமாற்றம் செய்துள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், மீண்டும் சி.ஸ்ரீதரனை பட்டிருப்பு வலயத்திற்குக் கல்விப் பணிப்பாளராக நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்து, கிழக்கு மாகாண ஆளுநர், கல்வி அமைச்சின் செயலாளர், பிரதம செயலாளர், மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோரின் கவனத்தை ஈர்த்து இவ்வார்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

Dialog airtel axiata

டயலொக்கும் ஆசிஆட்டா குழுமமும் பார்த்தி எயார்டெலும்

## ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுகின்றன

2024 ஏப்ரல் 18, டயலொக் ஆசி ஆட்டாபி எல்சி ("Dialog"), ஆசி ஆட்டா குழுமம் பெர்ஹாட் ("Axiata") மற்றும் பார்த்தி எயார் டெல்லிமிடட் ("Bharti Airtel") ("தரப்பினர்" அனைவரும் ஒன்றாக), ஆகியன பார்த்தி எயார் டெல்லங்கா (பிரைவேட்) லிமிடட்டின் ("Airtel Lanka") வெளியிடப்பட்ட பங்குகளை முழுமையாக கையகப்படுத்துதல் குறித்த வரையறுக்கப்பட்ட ஒப்பந்தத்திற்கு இணங்குகின்றன.

இந்த உடன்படிக்கையின் கீழ் எயார் டெல்லங்காவின் வெளியிடப்பட்ட பங்குகளில் 100%ஐ டயலொக் கையகப்படுத்தும் அதேவேளை, டயலொக்கின் மொத்த வெளியிடப்பட்ட 10.355% மதிப்பிலான சாதாரண வாக்குரிமை பங்குகளை பங்குமாற்று முறை மூலம் பார்த்தி எயார் டெலுக்கு டயலொக் வழங்கும்.

இந்த பரிவர்த்தனை டயலொக் பங்குதாரரர்களின் ஒப்புதலுக்கு உட்பட்டது மற்றும் பங்குவிற்பனை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பிட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் வரை நிலுவையில் உள்ளது, இதில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் (CSE) அனுமதி மற்றும் பொருந்தக்கூடிய பிரசட்ட, கூட்டாண்மை மற்றும் ஒழுங்கு முறை இணக்க நடைமுறைகள் ஆகியவை அடங்கும்.

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு (TRCSL) முன்மொழியப்பட்ட இவ்வொன்றிணைவுக்கு அதன் அனுமதியை வழங்கியுள்ளது, இது இலங்கை முழுவதும் தொலைத்தொடர்பு சேவைகளை ஏற்றுக்கொள்வதற்கான அதன் தொலைநோக்கை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இந்த ஒன்றிணைவு, இணைக்கப்பட்ட நிறுவனத்தை பாரிய அளவிலான பொருளாதாரங்களைத் திரட்டவும், உட்கட்டமைப்பில் நகலெடுப்புகளை குறைப்பதற்கும், தொழில்நுட்பம் மற்றும் மூலதனச் செலவினங்களில் ஒருங்கிணைவை அடைவதற்கும், மேம்படுத்தப்பட்ட அதிவேக Broadband இணைப்பு, குரல் மற்றும் பெறுமதிசேர் சேவைகள், செலவு சேமிப்பு மற்றும் தொழிற்பாட்டு வினைத்திறன் ஆகியவற்றுக்கு வழிவகுக்கும்.

ஆசி ஆட்டாகுழுமம் பெர்ஹாட்டின் முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் குழுமத்தின் பிரதமநிறைவேற்று அதிகாரியுமான விவேக்சூட்

"டயலொக் மற்றும் எயார் டெல்லங்காவுக்கு இடையிலான இந்த ஒன்றிணைவு ஆசிஆட்டாவின் சந்தை இணைப்பு மற்றும் மீண்டெழுந்தன்மைக்காக வகுக்கப்பட்ட மூலோபாயத்தின் வழி சீரமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஒன்றிணைவு ஆசிஆட்டாவின் பங்குதரர்களுக்கு மதிப்புகளை உருவாக்கும். மேலும் இவ்விரு நிறுவனங்களும் ஒன்றிணைவதை நாம் எதிர்நோக்கியுள்ளோம்.

எயார் டெல்லங்கா மற்றும் அதன் ஊழியர்கள் மீது நாம் மிகுந்த மரியாதை வைத்துள்ளோம். அவர்களுடன் சேர்ந்து இலங்கை மக்கள், வணிகங்கள், மற்றும் பொதுத்துறைக்காக பணியாற்ற ஆவலாக உள்ளோம்" என தெரிவித்தார்.

ஆசிஆட்டா குழுமம் பெர்ஹாட், தொலைத்தொடர்பு வணிகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் குழும நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஹான்ஸ் விஜயசூரிய இதுகுறித்து தெரிவிக்கையில்,

"இலங்கையின் தொலைத்தொடர்பு துறையில் முன்னிலை வகிக்கும் இரு தொலைத்தொடர்பு குழுமங்களினது இந்த ஒன்றிணைவு, இலங்கை தொலைத்தொடர்பு துறையின் வளர்ச்சிக்கும் பேண்தகு நிலைக்கும் நன்மை பயக்கும் வகையில் அவற்றை ஒன்று சேர்க்கிறது.

இலங்கையின் நுகர்வோருக்கும் நிறுவனங்களுக்கும் நாம் அளிக்கும் வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் புத்தாக்கத்தில் புதியஎல்லைகளை அடைய எதிர்பார்த்துள்ளோம்" என்றார்.

"டயலொக்குடன் எமது தொழிற்பாடுகளை ஒன்றிணைப்பதில் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். அவர்கள் அளிக்கும்பாரிய இடமும் தனித்துவமான முன்மொழிவுகளையும் வைத்து பார்க்கையில் எமது வாடிக்கையாளர்கள் தொடர்ச்சியாக அதிநவீன சேவைகளை தங்குதடையற்ற வலையமைப்பினூடாக பெறுவர் என்பதில் நாம் உறுதியாகவுள்ளோம்" என பார்த்திஎயார் டெல்லிமிடட்டின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கோபால் விட்டல் தெரிவித்தார்.

"இலங்கையில் உன்னதமான தொலைத்தொடர்பு சேவைகளை வழங்குவதற்கு நாம் காட்டும் அர்ப்பணிப்பில் இந்த ஒப்பந்தம் ஒரு முக்கியமான படியாக அமையும்" என டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி பணிப்பாளர் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்க தெரிவித்தார்.

"டயலொக் மற்றும் எயார் டெல்லங்கா இடையிலான இந்த தொழிற்பாட்டு ஒன்றிணைப்பானது புத்தாக்கம் மற்றும் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளை தோற்றுவிப்பதோடு எமது நுகர்வோருக்கும் பல்வேறு வழிகளில் அனுகூலங்களை அள்ளித்தரும்" என பார்த்தி எயார் டெல்லங்கா (பிரைவேட்) லிமிடட்டின் பிரதம நிறைவேற்று அதிகாரி அஷிஷ்சந்திரா தெரிவித்தார்.

## கரையொதுங்கிய பெண்ணின் சடலம்

எம்.எஸ்.எம்.நூர்தீன்



மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம்பதி பாலமுனை கடற்கரையில் பெண் ஒருவரின் சடலம் வியாழக்கிழமை (18) கரை ஒதுங்கியதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சடலம் 55 வயது மதிக்கத்தக்க பெண்ணுடைய சடலம் எனவும் இது வரை சடலம் அடையாளம் காணப்படவில்லை எனவும் இது தொடர்பில் விசாரணைகள் மேற்கொண்டு வருவதாகவும் காத்தான்குடி பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# பெருந்தோட்ட தொழிற்சங்கங்களின் இருப்புக்கு சிக்கல்

பெருந்தோட்டத் தொழிற்சங்களின் வகிபாகம் முக்கிய பங்கை வகிக்கின்றது. எனினும், அவ்வாறான தொழிற்சங்கங்கள், தொழிலாளர்களின் சந்தா பணத்தைக் கொண்டே வாழ்கின்றன என்பர். உண்மையில், தொழிற்சங்கங்களில் கடமையாற்றுவோருக்குச் சம்பளம் உள்ளிட்ட இதர செலவுகளுக்காக இந்த சந்தா பணம் பயன்படுத்தப்படுகிறது.

தோட்ட நிர்வாகத்துக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்ப்பதற்குத் தொழிற்சங்கங்களின் பங்கு அளப்பரியது. இதனூடாக பலர் நன்மையடைந்துள்ளனர். தொழிலாளர்களுக்கும் தோட்ட நிர்வாகத்துக்கும் இடையில், பாலமாகவே இருக்கின்றது.

எனினும், தற்போதைய சம்பள உயர்வு விவகாரத்தில், பேச்சுவார்த்தையில் ஈடுபடும் தொழிற்சங்களின் அழுத்தம் போதாதென்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. தொழிற்சங்கங்கள், தங்களுடைய அரசியல் இருப்பை தக்கவைத்துக்கொள்ளும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுப்பதாகவே குற்றச்சாட்டப்படுகின்றன.

சம்பள உயர்வு விவகாரத்தில் தொழிலாளர்களை வீதியில் இழுத்துவிட்டு இன்னும் சிலர் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். தங்களுடைய சம்பள அதிகரிப்புக்கு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு, அழுத்தம் கொடுக்கவேண்டுமாயின், தொழிற்சங்கங்கள் எதற்கு?

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வை வலியுறுத்தி, கொழும்பில் இன்று (19) வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்துள்ளது. எனினும், சம்பள உயர்வை பெற்றுத்தருவோமென காங்கிரஸே, காலக்கெடுவையும் அறிவித்திருந்தது.

பேச்சுவார்த்தை மேசையில் இருக்கும் தொழிற்சங்கங்கள் முதலாளர்மார் சம்மேளத்துக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் வெறுமே ஆர்ப்பாட்டங்களை நடத்துவதில் எவ்விதமான பிரயோசனமும் இல்லை. இறுதியில் எங்களுடைய பலத்தைத் தலைநகரில் காண்பித்துவிட்டோம் என்று தம்பதட்டம் அடிப்பது மட்டுமே எஞ்சும்.

இவையெல்லாம் கடந்தகால கசப்பான பாடங்களாகும்.

தொழிலாளர்களை போராட்டம் நடத்துவதன் ஊடாக, அவர்களின் வேலைநாட்கள் குறையும். பறிக்கின்ற கொழுந்தின் நிறை குறையும். இவையெல்லாம் தொழிலாளர்களுக்கே பாதகமாக அமையும் என்பதில் ஐயமில்லை. ஆகையால், பேச்சுவார்த்தை மேசையில் அழுத்தங்களைப் பிரயோகிப்பதே புத்திசாலிதனமாகும்.

பெருந்தோடங்களை பொறுத்தவரையில் நிலையான ஊழியர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்துகொண்டே செல்கின்றன. போதியளவான சம்பளம் இன்மையால், அவர்கள், பெருநகரங்களுக்கு நாட்கூலிகளாக வேலைக்கு வந்துவிடுகின்றனர்.

பெரும்பாலான பெண் தொழிலாளர்கள் பங்களாக்களில் பணிப்பெண்களாக வேலைச்செய்கின்றனர். ஆண் தொழிலாளர்களில் பலர், தோட்டுத் தொழிலைக் கைவிட்டுவிட்டு, சுயதொழிலில் ஈடுபடுகின்றனர். இவையெல்லாம் தோட்ட நிர்வாகத்துக்கும், முதலாளிமார் சம்மேளனத்துக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தாது. ஏனெனில், அன்றாட கூலிக்கு வேலைச்செய்யவிரும்பும் தொழிலாளர்களைக் கொண்டு, தேவையான வேலைகளை செய்துகொள்கின்றன.

தோட்டங்களில் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைய, குறையத் தொழிற்சங்கங்களின் இருப்புக்கு கேள்விக்குறியாகும் என்பதை நினைவில் கொள்வதே சிறந்தது.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136



Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## கறுப்பு யூலையின் நாற்பதாண்டுகளின் பின் 48:

# 1977: சர்வாதிகார அரசியலின் தொடக்கப்புள்ளி



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

1977 தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பெற்ற மாபெரும் வெற்றியானது பாரிய சேதங்களை நாட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்தது. ஒருபுறம் இனமுரண்பாடு மோசமடையவும் இனங்களுக்கிடையே பகைமை வேர்விடவும் வழியமைத்தது. மறுபுறம் சுயாதீன அரச நிர்வாகமும் நீதித்துறையும் சீரழிந்ததோடு அராஜரீக அரசியல் தலைதூக்கியது. இன்றும் இலங்கையின் அரசியல் கலாசாரத்தின் பகுதியாகவுள்ள அதிகாரத் துஷ்பிரயோகத்தின் தொடக்கங்களை 1977ஐ தொடர்ந்த அடுத்த பத்தாண்டுகளில் காணலாம். ஜே.ஆர்.ஜெயவர்த்தன தனது சர்வாதிகார நடத்தையை இனமுரண்பாடு என்ற துணி கொண்டு மறைக்க முற்பட்டார். தனது இயலாமைக்கு இனமுரண்பாட்டைக் காரணங் காட்டினார். ஆனால் இனத்துவ துவேசத்தில் மூழ்கிப் போயிருந்த இடதுசாரிகள் உட்பட்ட எதிர்க்கட்சிகள் இதைக் கவனிக்கவோ கண்டிக்கவோ இல்லை. இதன் மோசமான பலன்களை இன்றும் நாடு எதிர்நோக்குகிறது.

1978இல் ஜே.ஆர். கொணர்ந்த அரசியல் யாப்பு அவர் 1977 தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றும் முன்னமே திட்டமிடப்பட்டது என்பதைப் பலர் சொல்லியிருக்கிறார்கள். அந்த யாப்பின் பிரதான நோக்கங்களில் ஒன்று தனது ஆட்சி கவிழாமற் தவிர்ப்பதற்கான அனைத்து சட்ட ஏற்பாடுகளையும் செய்வது. மாவட்ட அடிப்படையில், விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம், இனி எப்போதும் ஒரு கட்சி மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்து புதிய அரசியல் யாப்பொன்றைப் புனையும் வாய்ப்பை ஏறத்தாழ இல்லாமற் செய்யும் நோக்குடையது. அவ்வாறே, கட்சித் தாவலுக்கு எதிரான அரசியல் யாப்புப் பகுதிகள் ஆளுங் கட்சி உறுப்பினர்கள் எதிர்க் கட்சிக்குத் தாவி ஆட்சியைக் கவிழ்க்கும் வாய்ப்பை மறுக்கும் நோக்கைக் கொண்டது.

அவருடைய பதவிக் காலத்தில் பன்னிரண்டு சட்டத் திருத்தங்கள் நிறைவேறின. இதன்மூலம் அரசியல் யாப்பானது கேலிக்குரியதாயும் அதிகாரத்தை நிறுவும் கருவியாகவும் மாறியது. குறிப்பாக மூன்று திருத்தங்களை இங்கு நோக்கலாம்.

இரண்டாவது யாப்புத் திருத்தம், எதிர்க்கட்சியில் இருந்து ஆளுங்கட்சிக்குத் தாவுவதை அனுமதிக்கும் வகையில் உருவாக்கப்பட்டது. ஒரு பாராளுமன்ற உறுப்பினர் கட்சி தாவினால் அவர் பதவியை இழப்பார் என்பது யாப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது. தனது பெரும்பான்மையைக் காக்க ஜே.ஆரே இதை யாப்பின் பகுதியாக்கினார்.

ஆனால், அவருக்கு எதிர்க்கட்சியிலிருந்து ஆளும் கட்சிக்கு வருவோரை ஏற்க ஒரு வழி தேவைப்பட்டது. எனவே, இந்த யாப்புத் திருத்தம், ஒருவரின் கட்சித் தாவலை ஒரு பாராளுமன்றப் பெரும்பான்மை அங்கீகரித்தால் கட்சித் தாவல் செல்லுபடியாகும் என்றும் அவர் தொடர்ந்தும் பதவி வகிக்கலாம் என்று அறிவித்தது. இதன் மூலம் எதிர்க்கட்சியிலிருந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினர் செ.இராசதுரை ஆளுங்கட்சிக்குப் போய் அமைச்சரானார். வேறு சிலரும் இவ்வாறு ஆளும் தரப்புக்குத் தாவினார்கள்.

மூன்றாவது திருத்தம், ஜனாதிபதித் தேர்தலை அதற்குரிய ஆறு வருடத் தவணை முடியுமுன் நான்கு ஆண்டுகளின் பின்னர் எப்போதும் நடத்தலாம் என்று அறிவித்தது. இதன்மூலம் ஒரு ஜனாதிபதி தனது செல்வாக்குச் சரிய முன்னரே தேர்தலை நடாத்த இது வழிசெய்தது. இதையே சந்திரிகாவும், மஹிந்தவும் பின்னர் பயன்படுத்தினர்.

நான்காவது திருத்தம், முதலாவது பாராளுமன்றத்தின் ஆயுட்கால நீட்டிப்பைப் இயலுமாக்கியது. இது ஒரு ஜனநாயக விரோத நடவடிக்கையாகும். தேர்தலுக்குப் போனால் அதே ஆறில் ஐந்து பெரும்பான்மையைப் பெறவியலாது என்பதைத் தெரிந்த ஜே.ஆர். இத்திருத்தத்தின் மூலம் பாராளுமன்றின் காலத்தை நீடித்தார்.

யாப்புத் திருத்தங்களுக்கு வெளியேயும் அவர் தனது பதவியைக் காக்க அயராது போராட வேண்டியிருந்தது. ஏனெனில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தான் வெற்றிபெறுவது பற்றிய ஐயங்கள் அவருக்கிருந்தன. மக்களின் செல்வாக்குப் பெற்ற தலைவராக அவர் இருக்கவில்லை. எனவே தனது பிரதான போட்டியாளரைக் களத்திலிருந்து அகற்ற வேண்டியிருந்தது. எனவே, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு சவாலாக அமையக்கூடிய சிறிமாவோ பண்டாரநாயக்கவின் அரசியல் உரிமைகளை ஏழு ஆண்டுக் காலத்திற்கு மறுத்து அவருடைய பாராளுமன்றப் பதவியைப் பறிப்பதற்கு ஜயவர்தன ஒரு ஆணைக்குழவை நியமித்து தனது பழிவாங்கலை நடத்தினர். இது ஆணைக்குழுக்கள் மேலிருந்த நம்பிக்கையைச் சிதைத்தது. இப்போதும் ஒரு அரசியல் நாடகமாகவே ஆணைக்குழுக்கள் இயங்குகின்றன. இதற்கான முன்னோடி ஜே.ஆரின் குறித்த ஆணைக்குழு.

1982 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி உறுதி என்று போட்டியிட்ட ஜே.ஆரால் 52.9 வீதம் வாக்குகளை மட்டுமே பெறமுடிந்தது. எதிரணி பலவீனமானதாயும் சிதறுண்டதாகவும் இருந்த நிலையிலும் கூட பெருவெற்றியை அவரால் பெற்றுக் கொள்ள இயலவில்லை. நீதித்துறையையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க விரும்பினார். இங்கு ஒரு உதாரணத்தைக் காட்டுவது பொருத்தம். இரத்தினபுரி மாவட்டத்தில் கலாவன தொகுதிக்கு நடைபெற்ற தேர்தல் செல்லாது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. 1981 நடந்த இடைத் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் சரத் முத்தெட்டுவேகம வென்றார். அத் தோல்வியைச் சீரணிக்க இயலாத ஜயவர்தன, அரசியல் யாப்பை மாற்றிக் கலாவன தொகுதிக்கு 02 பாராளுமன்ற உறுப்பினர்களை வைத்திருக்க முயன்றார். அதன்படி, தேர்தல் செல்லுபடியாகாததால் பதவியிழந்த ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான பிலாப்பிட்டியவும் சரத் முத்தெடடுவேகமவும் ஒரே ஆசனத்திற்கான இரண்டு உறுப்பினர்களையும் வைத்திருப்பதற்கான சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தார். உயர் நீதிமன்றம் அச் சட்டத்திருத்தத்தை நிறைவேற்றப் பாராளுமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்று தீர்த்ததால் அம்முயற்சி கைவிடப்பட்டது. இது, உயர் நீதி மன்றமே, ஜயவர்த்தனவுக்குத் தடையாக அமையக்கூடிய ஒரே நிறுவனமாக இருந்தது என்பதைக் காட்டியது. சுதந்திர இலங்கையில் சுயாதீனமான அரசியல் தலையீடுகள் இன்றி இயங்கி வந்த ஒரே நிறுவனம் நீதித்துறை மட்டுமே.

நீதித்துறை நியமனங்கள் ஒழுங்கு முறைப்படியும் பதவி உயர்வுகள் மூப்பின் அடிப்படையிலுமே இடம்பெற்றன. 1977இல் ஜே.ஆர் இந்த நடைமுறைகளைப் புறந்தள்ளி தனக்கு நெருக்கமான நெவில் சமரக்கோனை பிரதம நீதியரசாக நியமித்தார். இதுவே நீதிபதிகள் நியமனத்தில் ஒழுங்குகளை மீறி அரசியல் முன்னிலைக்கு வந்த முதல் நிகழ்வு. இதுவே நீதித்துறையின் சரிவின் தொடக்கப்புள்ளி எனவும் கொள்ளலாம்.

1978 யாப்பு ஜனாதிபதியை எவ்வித நீதி விசாரணைக்கும் அப்பாற்பட்டவராக்கியது. நீதிபதிகளுக்கு இருந்த சட்டப்பாதுகாப்பை நீக்கியது. ஆனால், இதைப் பிரதம நீதியரசரான நெவில் சமரக்கோன் கண்டுகொள்ளவில்லை. புதிய யாப்பை நிறைவேற்றியவுடன் ஜே.ஆர் செய்த முதற் காரியங்களில் ஒன்று உயர்நீதிமன்ற நீதிபதிகளாக இருந்த 12 பேரையும் பதவி விலக்கினார். அதில் ஐந்து பேரை மட்டும் மீள நியமித்தார், அந்நியமனமும் மூப்பின் அடிப்படையிலான தல்ல. 1984 இல் நெவில் சமரக்கோனுடன் முரண்பாடு ஏற்பட்ட நிலையில் அவரைப் பதவி விலக்க சட்டமியற்ற ஜே.ஆர் முடிவெடுத்த நிலையில் அவமானத்தைத் தவிர்க்க நெவில் சமரக்கோன் தானாகவே பதவி விலகினார். அதேவேளை சிறிமாவைத் தண்டித்த ஆணைக்குழுவின் நீதிபதிகளுக்கு அவர்களுக்குரிய சன்மானங்கள் வழங்கப்பட்டன. அவ்வாறே சர்வானந்தா புதிய பிரதம நீதியரசரானார். ஓய்வுக்குப் பின்னர் அவருக்கு கொழும்பு மாகாண ஆளுநராகவும் பதவி வழங்கப்பட்டது.

1978 ஜனவரியில் ‘தொழில் உறவுச் சட்டம்’ என்ற பெயரில் மிகவும் மோசமான தொழிலாளரின் உரிமைகளை மறுக்கும் சட்டமூலத்தை ஜே.ஆர் அறிமுகப்படுத்தினார். இதன் தொடர்ச்சியாக 1979 இல் ‘அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டம்’ கொண்டுவரப்பட்டது. அதன்மூலம் அரசாங்க ஊழியர்களின் வேலை நிறுத்த உரிமை இல்லாமல் செய்யப்பட்டது. வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோர் அபராதம், சிறை, சொத்துப் பறிமுதல் ஆகிய தண்டனைகட்கு உட்படலாம் என்பதை விட, அவர்கள் உயர் தொழில் புரிவோராயின் அவர்களுடைய தொழிற் தகைமையை நீக்கவும் அச் சட்டம் இடங்கொடுத்தது. இதன் மூலம் தொழிற்சங்க இயக்கத்தை முடக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

1979-80 காலப்பகுதியில் தீவிரமடைந்த பொருளாதார நெருக்கடியின் விளைவால் 1980 மே மாதம் தொழிற்சங்கங்களின் குழு எடுத்த முடிவின்படி ஜூன் 5ம் திகதி ஒரு வெகுசன மறியற் போராட்டமும் அரை நாள் வேலைநிறுத்தமும் நடந்தது. இதன்போது ஜே.ஆரின் உத்தரவின் பேரில் குண்டர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். டி.சோமபால என்ற ஒரு தொழிற்சங்கவாதி கொலையுண்டார். ஜூலை 18ஆம் திகதி ஒரு பொது வேலை நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. அரசாங்கம் ஜூலை 16ஆம் திகதி அவசரக்கால சட்டத்தைப் பிறப்பித்து ஏறத்தாழ அனைத்துத் தொழில்களையும் அத்தியாவசிய சேவைகளாக அறிவித்தது. அத்துடன், அவசரக்கால சட்டத்தின் கீழ், வேலைநிறுத்தம் பற்றிய கடும் பத்திரிகைத் தணிக்கையும் விதிக்கப்பட்டது. இலங்கையின் ஜனநாயகம் முழுமையான சர்வாதிகாரமாக மாறியது.



## வாழ்வியல் தரிசனம்

மனித உயிர்களுக்கு மட்டுமல்ல, பிறப்பு எடுக்கும் எல்லா ஜீவன்களுக்கும் இந்தப் பிறப்பு ஒரே ஒரு தடவைதான். இது ஓர் அரிய சந்தர்ப்பம். அடுத்த பிறவி பற்றி ஆராயாமல், தற்போது வாழும் காலத்தில் செய்ய வேண்டிய, நல்ல கருமங்களைச் செய்வதே சிறப்பானதாகும்.

இருக்கும் காலத்தில் நாம் என்ன செய்து கொண்டிருக்கின்றோம் என்பதில் நேரிய தெளவும் உழைப்பும் அவசியமானது.

ஒவ்வொரு பொழுதுகளும் கடந்த வண்ணமிருக்கின்றது.

எனவே, போன பொழுது மீண்டும் எழுவதில்லை. அவதானமாக அறிவுடன் இயங்குவதே ஆக்கப்பூர்வமானதாகும்.

நாளைக்கு எனச் சொல்வதை நிறுத்துங்கள். ஆனால், எல்லா வேலைகளையும் ஒரே நாளில் செய்ய முடியாது. செய்யும் கருமங்களை அட்டவணைப்படுத்துக!

முறைப்படி கருமம் ஆற்றுவதற்கு, அவை பற்றிய அறிதலுடன், தெரியாதவற்றைக் கேட்டு உணர்ந்து செய்தால், காரிய சித்தி உண்டாகும்.

சில தடவைகள் எதிர்பாராத துன்பங்கள் நடப்பதும் இயற்கை. ஆனால், அதற்குள் தொடர்ந்து சுழலாமல், இயங்கியே ஆகவேண்டும்.

நமக்கும் குடும்பத்துக்கும் சேமிப்பு அவசியம் தேவை. உலகுக்கான சேவையை மறக்காதீர்கள்!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### எதிர்காலத்தில் தீர்வு காணவும்



தமிழ்- சிங்கள சித்திரை புத்தாண்டு நிறைவுற்று மீண்டும் கொழும்பு மற்றும் ஏனைய இடங்களுக்குச் செல்வதற்கு ஹட்டன் பிரதான பஸ் தரிப்பிடத்தில் கூடுதலான பயணிகள் காத்திருந்தனர்.

இதன்போது நீண்ட வரிசை காணப்பட்டதோடு பயணிகள் நீண்ட நேரம் காத்திருந்ததையும் அவதானிக்க முடிந்தது. அத்துடன், மிக குறைந்தளவான போக்குவரத்து சேவையே இடம்பெற்றதையும் அவதானிக்க முடிந்தது.

புத்தாண்டுக்குச் சொந்த இடங்களுக்கு வந்தவர்கள் மட்டுமன்றி, பொதுப் போக்குவரத்தை நம்பி, சிவனொளிபாதமலைக்கு வருகைதந்திருந்த யாத்திரீகளும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளதை அவதானிக்க முடிந்தது.

சிங்கள-தமிழ்ப் புத்தாண்டு மட்டுமன்றி, நீண்ட விடுமுறை நாட்கள், வெசாக் விடுமுறை, தீபாவளி மற்றும் பொங்கல் ஆகிய விசேட நாட்களில் சொந்த இடங்களுக்குத் திரும்புவோர் இவ்வாறான அசாதாரண நிலைமைக்கே முகங்கொடுக்கின்றனர். ஆகையால், எதிர்வரும் காலங்களிலாவது இவ்வாறான நிலைமை ஏற்படாதவகையில் நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது உரிய தரப்பினரின் பொறுப்பாகுமென பயணிகள் தெரிவிக்கின்றனர்.

– இரா.யோகேசன்

# யூனியன் வங்கியின் புதிய டிஜிட்டல் வலயங்கள்

டிஜிட்டல் வங்கியியல் சேவைகளினூடாக வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் சௌகரியம் ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில், யூனியன் வங்கி தனது முதலாவது டிஜிட்டல் வலயத்தை, கொழும்பு 3இல் அமைந்துள்ள தனது தலைமையகத்தில் அறிமுகம் செய்துள்ளது. அதனூடாக வாடிக்கையாளர்களுக்கு 24/7 நேரமும் ஸ்மார்ட் வங்கிச் சேவைகளை அனுபவிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. வங்கியின் டிஜிட்டல் மாற்றியமைப்பு மூலோபாயத்துக்கமைய, நீடித்த சௌகரியம் மற்றும் ஒப்பற்ற வங்கியியல் அனுபவங்களை வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக்கொடுக்கும் வகையில், எதிர்வரும் காலங்களில் இது போன்ற டிஜிட்டல் வலயங்களை முக்கியமான கிளைப் பகுதிகளில் நிறுவுவதற்கு வங்கி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.




டிஜிட்டல் வலயங்களில் தன்னியக்க டெலர் இயந்திரங்கள் (ATM), பண மீள்-சுழற்சி இயந்திரங்கள் (CRM) மற்றும் காசோலை வைப்புகள், கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகள் மற்றும் பலவற்றுக்கான தன்னியக்கமயமான வசதிகள் போன்றன அடங்கியிருக்கும். இவற்றினூடாக, அத்தியாவசிய வங்கிச் சேவைகளாக கருதப்படும் பண வைப்புகள், பண மீளப் பெறுகைகள், பணப் புழக்கமில்லா வைப்புகள், யூனியன் வங்கிக் கணக்குகளுக்கான பணப் பரிமாற்றங்கள் போன்றவற்றுடன், யூனியன் வங்கி கடன் அட்டைகளுக்கான கொடுப்பனவுகளுடன், கணக்கு மீதி விவரங்களை அறிந்து கொள்ளல் போன்றவற்றை எந்நேரத்திலும் மேற்கொள்ளக்கூடிய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ‘வாழ்க்கையை மெருகேற்றிடும் மாற்றம்’ எனும் வங்கியின் தொனிப்பொருளுக்கமைய, பெறுமதி சேர் செயற்பாடுகளினூடாக வாடிக்கையாளர்களுக்கு டிஜிட்டல் சௌகரியத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கும்.

யூனியன் வங்கி, இணைய வங்கிச் சேவையை இலங்கையில் முதன் முறையாக அறிமுகம் செய்த வங்கியாக, 90ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் டிஜிட்டல் வங்கியியல் அனுபவத்தை முதன்முறையாக ஏற்படுத்தியிருந்தது. வாடிக்கையாளர்களின் டிஜிட்டல் வங்கியியல் சௌகரியத்தை மேம்படுத்தும் நவீன வசதிகளைக் கொண்ட UBgo மொபைல் app அறிமுகம் மற்றும் நவீன தொழில்நுட்பம், ஒன்றிணைப்பு மற்றும் டிஜிட்டல் ஆற்றல்களுடனான தொழிற்துறையின் முன்னணி பண முகாமைத்துவ தீர்வான கூட்டாண்மை மற்றும் SME வாடிக்கையாளர்களுக்கான BizDirect அறிமுகம் போன்றவற்றினூடாக தனது டிஜிட்டல் வங்கியியல் தீர்வுகளின் பிரசன்னத்தை தொடர்ந்தும் வியாபித்திருந்தது. பரிபூரண டிஜிட்டல் மாற்றியமைப்பு செயற்பாடுகளுக்கு வலுவூட்டும் வகையில், உறுதியான தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகளை வங்கி தொடர்ந்தும் மேற்கொண்ட வண்ணமுள்ளது.

---

# மும்மொழிகளிலும் ‘ComBank Digital’

‘ComBank Digital’ தளம், அதிக உள்ளடக்கம் மற்றும் அதிக பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் மும்மொழிகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது,

இந்த வளர்ச்சி தொடர்பாக கொமர்ஷல் வங்கி தெரிவிக்கையில், இந்த தளத்தின் பன்மொழி திறன் கிராமப்புறங்களிலும் பாரம்பரியமான வாடிக்கையாளர் பிரிவுகளிலும் டிஜிட்டல் வங்கியை ஏற்றுக்கொள்வதை துரிதப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என கூறியுள்ளது.






கொமர்ஷல் வங்கியின் டிஜிட்டல் வங்கியியன் உதவிப் பொது முகாமையாளர் பிரதீப் பந்துவன்ஸ, அதன் பன்மொழிச் செயற்பாட்டின் ஊடாக வங்கிக் கணக்கற்ற மற்றும் குறைந்தளவு வங்கிகளை பயன்படுத்துவோருக்கான நிதிச் சேவைகளுக்கான அணுகலை விரிவுபடுத்துவதற்கும் ComBank Digital உதவும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

1.2 மில்லியன் பயனர்களுடன், ComBank Digital ஏற்கெனவே எங்களின் நிலைத்தன்மைக்கான வீதி வரைபடத்தில் குறிப்பிடத்தக்க அங்கமாக உள்ளது, ஆனால், பயன்பாட்டின் அடிப்படையில் மக்கள் தொகை மற்றும் புவியியல் இடைவெளிகள் இன்னும் உள்ளன, இதனை குறைப்பதற்கு பயனர்களுக்கு சிங்களம் அல்லது தமிழில் பரிவர்த்தனைகளைத் தேர்ந்தெடுப்பதற்கான விருப்பத்தேர்வினை நாங்கள் வழங்குகிறோம் என்றும் பந்துவன்ஸ கூறினார். ‘இது சில வாடிக்கையாளர் பிரிவுகளுக்கு பயன்பாட்டை எளிதாக்குவதுடன், மற்றும் தளத்தில் பாரியளவு எண்ணிக்கையானோரை பதிவு செய்ய ஊக்குவிக்கும்.’

அனைத்து இணையத்தள (Online) மற்றும் மொபைல் பேங்கிங் ஊடகங்களின் ஒருங்கிணைப்பாக, ஒரே ஒரு சர்வ-ஊடக தளத்தில், இயங்கும் ComBank Digital ஆனது, பதிலளிக்கக்கூடிய வலை பயன்பாடு மற்றும் மூன்று மொபைல் பயன்பாடுகள் (iOS, Android மற்றும் Huawei) மூலம் வழங்கப்படுகிறது.

இது மேசைக்கணினி, மடிக்கணினி, டாப்புகள் மற்றும் ஸ்மாரட் கையடக்கத் தொலைபேசிகள் (desktop PCs, laptop computers, tabs and smart phones) போன்ற அனைத்து சாதனங்களிலும் அணுகலை செயற்படுத்துகிறது.









## மாற்றிக் கொண்டாலென்ன

எப்போதும் கூண்டுக்குள்ளே
அடைபட்டிருக்க வேண்டுமா...
எப்போதும் அழுது கொண்டு
தான் இருக்க வேண்டுமா
ஒரு மாறுதலுக்காயினும் சிரிக்கலாமே

எப்போதும் சண்டை போட்டுக்
கொண்டு தான் இருக்க வேண்டுமா...
ஒரு மாறுதலுக்காயினும்
பற்றிப் பிடித்துக் கொள்ளலாமல்லவா

எப்போதும் மட்டம் தட்டிக்
கொண்டு புறம் பேசிக்
கொண்டும் தான் இருக்க வேண்டுமா...
ஒரு மாறுதலுக்காயினும்
பிறரை வாழ்த்தி தட்டிக்
கொடுத்திடலாம் அல்லவா

எப்போதும் ஏமாற்றிக்
கொண்டு தான் இருக்க வேண்டுமா...
ஒரு மாறுதலுக்காயினும்
உண்மையாக வாழலாம் அல்லவா

எப்போதும் மற்றவர்கள்
என்ன நினைப்பார்கள் என்று
பயந்து மற்றவர்களுக்காத்
தான் வாழ வேண்டுமா...
ஒரு மாறுதலுக்காயினும்
நமக்கு பிடித்தபடி
வாழ வேண்டுமல்லவா

எப்போதும் தனிமையில்
வாடிக் கொண்டு தான்
இருக்க வேண்டுமா...
ஒரு மாறுதலுக்காயினும்
காதலிக்கலாம் அல்லவா

– தௌபீக் முஹம்மது நவீத்
புல்மோட்டையூரான்





## நம்பிக்கை

வறுமை முத்திரை
குத்தியபடியே யாரும்
பிறப்பதில்லை மண்ணிலே...
சந்தர்ப்பம் என்னும்
தொட்டிலின் கயிறுகள்
அவிழ்ந்து விழும்
வேளையிலே சில
சரிவுகள் மனிதனையும்
குழந்தையாக்கி தள்ளி
விழுத்தி விடுகின்றது...

உதவிக்கு கரம் நீட்டிட
யாரும் இல்லாத தேசத்தில்
வறுமை பயிராதல்
தவிர்க்க முடியாதது தான்
பல மனங்களுக்குள் உதவி
என்னும் கார்மேகம்
மழைத்துளியைத்
தருவதில்லையே...
மகிழ்ச்சி
எங்கே பயிராவது...

படர்கின்ற செடி கொடிகளும்
மரத்துக்கு நிழல் தந்து
வேரின் குளிர்ச்சியை
பாதுகாப்பது கண்டும்
மனங்கள் கற்கவில்லையே
மகிழ்ச்சிப் பாடம்...
வாழ்க்கை ஒரு சக்கரம்...

அவ்வளவே அது
உருளத் தொடங்கும் போது
மேடு பள்ளம் பார்ப்பதில்லை ஏற்றம்
இறக்கம் நன்மை தீமை
எனும் பாதையிலேயே பயணிக்கிறது...
ஒருவரின் வறுமை
நிலை கண்டு
ஒருபோதும் எள்ளி
நகையாடாதீர்கள்...
விதி சரி பிழை என்னும்
வரலாறை எழுதுவதற்காகவே
படைக்கப்பட்டது...
காலமாற்றம்

மாற்றங்களையும் மாற வைக்கும்...
இரக்கம்,கருணை எங்கள் இதயத்தின்
இருப்பிடமானால் வறுமை தன்
இருப்பிடத்தை விட்டுத் தூரமாகும்

– றொசில்டா அன்டன்



## வழிசொல்லும் வசந்தக் குயில்...!

சித்திரையிற் கூவுகின்ற குயிலே
இற்றைவரை
நித்திரையில் ஏனிருந்தாய் சொல்லு...
நித்திரையில் இருந்ததெல்லாம் நீதான்
நித்தமுந்தான் கூவுகின்றேன் மனிதா...

கூடுகட்டத் தெரியாத குயிலே, உனக்கு
கூடு ஒன்று கட்டிநானும் தரவா..?
கூடு ஒன்று தந்ததிறம் போதும்,உனக்கு
குந்தியெழ சொந்த நிலம் உண்டா..?

ஓடியோடி தினமலையும் குயிலே, உனக்கு
ஓய்வொழிச்சல் கிடையாதா சொல்லு..?
ஓய்வொழிச்சல் இல்லாது உலகில், தினமும்
ஓடியோடி அலைவதெல்லாம் நீதான்...

காக்கைக் கூட்டில் முட்டையிடும் குயிலே, உன்
காரியத்தை மாற்றுவதும் எப்போ..? என்
காரியத்தை மாற்றவருமுன்னே, உன்
கயமைகளை மாற்றவழி பண்ணு...

கோபங் கொள்ள லாகாது குயிலே, நல்ல
கொள்கைவழி செல்லும் வழி சொல்லு...
வேகத்துடன் விவேகத்தையும் இணைத்தால், நீ
வெல்லும்வழி நல்லவழி காண்பாய்..!



– ஷெல்லிதாசன்

மாஸ்கோ

தந்தையின் மூடநம்பிக்கையால்

# ஒரு மாத சிசு பலி

சூரிய ஒளியே குழந்தைக்கு உணவளிக்கும் என்று கூறி, தன்னுடைய ஒரு மாத சிசுவுக்கு உணவு ஏதும் கொடுக்காமல் கொன்ற ரஷ்யாவைச் சேர்ந்த வீகன் இன்ஃப்ளுயென்ஸரான மாக்சிம் லியுட்டி என்பவருக்கு 8 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சூரிய ஒளியில் வைத்திருந்தால் 'சூப்பர் ஹியூமன் பவர்' கிடைக்கும் என்ற மூடநம்பிக்கையில் காஸ்மோஸ் என்ற தன் ஒரு மாத ஆண் சிசுவை வெயிலில் வைத்திருக்கிறார் மாக்சிம் லியுட்டி. அத்துடன் சூரிய ஒளி குழந்தைக்கு உணவளிக்கும் என்று கூறி, குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்கக் கூடாது என்றும் தனது





மனைவியை கட்டாயப்படுத்தி தடுத்துள்ளார்.

ரிஷிகள் பழங்காலத்தில் உணவு எடுத்துக்கொள்ளாமல் பிராண சக்தி மூலம் உயிர்வாழ்ந்தனர். அவர்கள் போல, தன் குழந்தையும் உயிர் வாழும் எனக் கூறி குழந்தையை வைத்துச் சில சோதனைகளை மாக்சிம் செய்துள்ளார். இதுதவிர, உடலின் ஆன்மிக ஆற்றலை மேம்படுத்த பெர்ரி போன்ற உணவுகளை பிஞ்சு குழந்தைக்கு அவர் கொடுத்ததுடன், குளிர்ந்த நீரில் குளிக்க வைத்து கொடுமைப்படுத்தியுள்ளார்.

தி ஹேக்

# இளவரசி தஞ்சம்

பாதுகாப்பு அச்சுறுத்தல் மற்றும் கடத்தல் புகார் காரணமாக நெதர்லாந்து இளவரசி அமலியா, ஸ்பெயின் சென்று பாதுகாப்புடன் படித்து வந்ததாக தகவல் வெளியாகி உள்ளது.



நெதர்லாந்து இளவரசி அமலியா (20), கடந்த 2022ஆம் ஆண்டு ஆம்ஸ்டர்டாம் பல்கலையில் அரசியல், சட்டம் மற்றும் பொருளாதாரம் படித்தார். அப்போது அவர் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டது. அவரை, புகைப்படக்கலைஞர்கள் விடாமல் துரத்தி துரத்தி படம் பிடிக்க ஆரம்பித்தனர். சக மாணவிகள் போல் படிக்க திட்டமிட்ட அவர், படிப்பை நிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படுத்தியது. இதனால் இளவரசி, தி ஹேக் நகரில் உள்ள பாதுகாப்பு மிக்க அரண்மனைக்கு திரும்பியதாக அவரது அரச குடும்பம் தெரிவித்தது.

அவரது தாயாரும், அரசியுமான மாக்சிமா கூறுகையில், எனது மகளால் ஆம்ஸ்டர்டாம் நகரில் வாழ முடியவில்லை. அரண்மனையை விட்டு வெளியேற முடியாத சூழல் உள்ளது. அவரது வாழ்க்கையில் பின்விளைவுகளை ஏற்படுத்துகிறது என கண்ணீருடன் தெரிவித்து இருந்தார்.

ஜகார்த்தா



எரிமலை வெடிப்பைத் தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை

# 11,000 பேர் வெளியேற்றம்

இந்தோனேசியாவின் சுலவெசி தீவில் எரிமலை ஒன்று பலமுறை வெடித்ததைத் தொடர்ந்து அங்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதனையடுத்து, ஆபத்தான பகுதிகளில் இருந்து சுமார் 11 ஆயிரம் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.


அப்பகுதி முழுவதும் உஷார் நிலை அமல்படுத்தப்பட்ட நிலையில், அங்கிருந்த பொதுமக்கள் 800 பேர் உடனடியாக வெளியேற்றப்பட்டனர். மேலும் எரிமலையை சுற்றி ஆறு கிலோ மீற்றர் தொலைவுக்கு சுற்றுலா பயணிகள் யாரும் இருக்கக் கூடாது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பெங்களூரு

# இரட்டைகளுக்கு விஷமான ஐஸ்

கர்நாடக மாநிலம் மாண்டியா மாவட்டம் ஸ்ரீரங்கப்பட்டணா தாலுகா பெட்டஹள்ளி கிராமத்தைச் சேர்ந்தவர் பிரசன்னா. இவரது மனைவி பூஜா. இவர்களுக்கு 1 வயதில் திரிசூல், திரிஷா ஆகிய இரட்டை குழந்தைகள் உள்ளனர்.

இவர்களது ஊருக்கு வாகனத்தில் கொண்டு வந்து ஐஸ்கிரீம் விற்பனை செய்யப்பட்டது. இதைத் தனது 2 குழந்தைகளுக்கு வாங்கி கொடுத்த பூஜா தானும் சாப்பிட்டார். ஐஸ்கிரீம் சாப்பிட்ட சில மணி நேரத்தில் இரட்டை குழந்தைகளுக்கு திடீரென உடல்நலம் பாதிக்கப்பட்டது. பூஜாவுக்கும் உடல் நலம் பாதிக்கப்பட்டது.



இதையடுத்து அவர்களை மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால், மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே இரட்டை குழந்தைகளும் உயிரிழந்து விட்டனர்.

சென்னை

# "சரியானவருக்கு வாக்களியுங்கள்"



தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறுகிறது. இதற்கான வாக்குப்பதிவு வெள்ளிக்கிழமை(19) நடைபெறவுள்ளது. வாக்குப்பதிவுக்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் முழுவீச்சில் செய்து வருகிறது.

தமிழகத்தில் உள்ள 39 பாராளுமன்ற தொகுதிகளிலும் அரசியல் கட்சியினர் உட்பட 950 வேட்பாளர்கள் களம் காண்கின்றனர். இதில் 76 பேர் பெண்கள். 874 பேர் ஆண்கள். இவர்களின் எதிர்காலத்தை 6 கோடியே 23 இலட்சத்து 33 ஆயிரத்து 925 வாக்காளர்கள் நிர்ணயம் செய்கிறார்கள்.

இந்த நிலையில், பாராளுமன்ற தேர்தல் குறித்து கவிஞர் வைரமுத்து வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில், "விரலில் வைத்த கருப்புமை நகத்தைவிட்டு வெளியேறச் சில வாரங்கள் ஆகும். பிழையான ஆளைத் தேர்ந்தெடுத்துவிட்டால் அநீதி வெளியேற ஐந்தாண்டுகள் ஆகும். சரியான நெறியான வேட்பாளருக்கு வாக்களியுங்கள். வாக்கு என்பது நீங்கள் செலுத்தும் அதிகாரம்" என்று தெரிவித்துள்ளார்.

திருவனந்தபுரம்

# தள்ளாடிய மணமகன்; மணமகள் அதிரடி முடிவு

கேரள மாநிலம் பத்தனம்திட்டா மாவட்டம் கோழஞ்சேரி அருகே தடியூர் பகுதியைச் சேர்ந்த ஒரு இளைஞன் டுபாயில் வேலை பார்த்து வருகிறார். இவருக்கும் இளம்பெண்ணுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. இவர்களது திருமணம் அங்குள்ள ஒரு தேவாலயத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

திருமணத்தன்று காரில் இருந்து இறங்கிய மணமகன் மது போதையில் தள்ளாடியபடி மணமேடை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தார்.



இதைப் பார்த்த மணப்பெண் உட்பட அனைவரும் கடும் அதிர்ச்சி அடைந்தனர். மேலும் போதையில் இருந்த மணமகன் திருமணத்தை நடத்துவதற்காக வந்திருந்த பாதிரியாரிடமும், மணமகளின் உறவினர்களிடம் தகராறு செய்தார்.

இதனை நேரில் பார்த்து கொண்டிருந்த மணமகள் அதிர்ச்சியடைந்தார். ஒரு கட்டத்தில் பொறுமையை இழந்த மணமகள், 'தனக்கு இந்த திருமணமே வேண்டாம்' என்று கூறி அங்கிருந்து புறப்பட்டு சென்றார். இதனால் திருமணம் நின்றது.



# "வங்காளதேசத்துக்கு பயனும் கிடையாது"


இந்தியாவில் நடைபெற்று வரும் ஐ.பி.எல். தொடரின் 17ஆவது சீசனில் நடப்பு சாம்பியனான சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 6 போட்டிகளில் விளையாடி 4 வெற்றிகளுடன் புள்ளி பட்டியலில் 3ஆவது இடத்தில் உள்ளது.

நடப்பு சீசனில் வங்காளதேச வீரரான முஸ்தாபிசுர் ரகுமான் சி.எஸ்.கே. அணிக்காக விளையாடி வருகிறார். இதுவரை 10 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ள அவர், சென்னை அணி தரப்பில் அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய பந்து வீச்சாளராக உள்ளார்.

இந்த நிலையில் முஸ்தாபிசுர் ரகுமான் மே 1ஆம் திகதியுடன் ஐ.பி.எல். தொடரிலிருந்து விலகுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. டி20 உலகக்கோப்பைக்கு தயாராகும் வகையில் தங்களுடைய சொந்த மண்ணில் ஜிம்பாப்வே அணிக்கு எதிராக வங்காளதேசம் 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடுகிறது. எனவே, அதில் பங்கேற்பதற்காக ஏப்ரல் 30ஆம் திகதியுடன் நாடு திரும்புங்கள் என்று அவருக்கு வங்காளதேச கிரிக்கெட் வாரியம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

இருப்பினும் சி.எஸ்.கே. நிர்வாகம் கேட்டுக் கொண்டதால் அவருக்கு மே ஒன்றாம் திகதி பஞ்சாப்புக்கு எதிராக நடைபெறும் போட்டியில் விளையாடுவதற்கு மட்டும் வங்காளதேச வாரியம் அனுமதி கொடுத்துள்ளது. ஏற்கெனவே விசா சம்பந்தமாக அவர் ஒரு போட்டியை தவற விட்டிருந்தார். தற்போது 5 போட்டிகளில் 10 விக்கெட்டுகள் எடுத்துள்ள அவர் முழு ஐ.பி.எல். தொடரில் விளையாட மாட்டார் என்பது சி.எஸ்.கே. அணிக்கு பின்னடைவாகவே பார்க்கப்படுகிறது.

# "பந்து கம்பெனியை மாற்ற வேண்டும்"



இந்தியாவில் நடைபெற்று வரும் உள்ளூர் தொடரான ஐ.பி.எல்.ன் 17ஆவது சீசன் கடந்த மாதம் சென்னையில் தொடங்கி கோலாகலமாக நடைபெற்று வருகிறது. இதுவரை 32 லீக் ஆட்டங்கள் முடிவடைந்துள்ளன. அதன் முடிவில் புள்ளி பட்டியலில் ராஜஸ்தான் முதலிடத்திலும், ஆர்.சி.பி. கடைசி இடத்திலும் உள்ளது.

அதிரடிக்கு பெயர் போன இந்த தொடரில் பொதுவாகவே பவுலர்களை சரமாரியாக அடித்து நொறுக்கும் பேட்ஸ்மேன்கள் பவுண்டரிகளையும் சிக்சர்களையும் பறக்க விட்டு ரசிகர்களுக்கு விருந்து படைப்பது வழக்கமாகும். ஆனால் இந்த வருடம் அது புதிய உச்சத்தை தொட்டுள்ளது.

இந்நிலையில் பேட்ஸ்மேன்கள் இப்படி அதிரடியாக விளையாடுவதற்கு தற்போதைய குக்கும்புரா நிறுவனத்தின் தரமற்ற பந்துகள்தான் காரணம் என்று இந்திய முன்னாள் வீரரும் மற்றும் கொல்கத்தா அணியின் ஆலோசகருமான கவுதம் கம்பீர் தெரிவித்துள்ளார். எனவே ஐ.பி.எல். நியாயத்துடன் நடைபெற வேண்டுமெனில் பந்து தயாரிக்கும் கம்பெனியை மாற்ற வேண்டும் என கம்பீர் கூறியுள்ளார்.

இது பற்றி சமீபத்திய பேட்டியில் அவர் பேசியது பின்வருமாறு:- "50 ஓவர்கள் தாங்கக்கூடிய பந்துகளை தயாரிப்பாளர் தயாரிக்காமல் போனால் அந்த தயாரிப்பாளரை மாற்ற வேண்டும். பந்து தயாரிக்கும் கம்பெனியை மாற்றுவதில் எந்த தவறும் இல்லை. குக்கும்புரா பந்துகளைத்தான் பயன்படுத்த வேண்டும் என்று ஏதாவது கட்டாயம் இருக்கிறதா" என கூறினார்.



# ரபேல் நடால் அதிர்ச்சி தோல்வி

பார்சிலோனா ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி ஸ்பெயினில் நடந்து வருகிறது. களிமண் தரை போட்டியான இதில் ஒற்றையர் பிரிவின் 2ஆவது சுற்றும் ஆட்டம் ஒன்றில் முன்னாள் 'நம்பர் ஒன்' வீரரும், 12 முறை சாம்பியனுமான ரபெல் நடால் (ஸ்பெயின்) அதிர்ச்சி தோல்வி அடைந்தார். அவரை 7-5, 6-1 என்ற நேர் செட்டில் 11ஆம் நிலை வீரர் அலெக்ஸ் டி மினார் (ஆஸ்திரேலியா) விரட்டினார்.

மற்றொரு ஆட்டத்தில் 6ஆம் நிலை வீரரான கேஸ்பர் ருட் (நார்வே) 6-3, 6-4 என்ற நேர் செட்டில் அலெக்சாண்ட்ரே முல்லரை (பிரான்ஸ்) தோற்கடித்து 3-வது சுற்றுக்கு முன்னேறினார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 19, ஏப்ரல் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.